**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 06.04.2026</u>**

**OS.250/2023**

**வா.சா.2 திரு.தினேஷ்**

**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி அன்பழகன் எனக்கு பெரியப்பாவா என்றால் அவர் எனக்கு உறவினரே கிடையாது. எனது அம்மாவும், அன்பழகன் மனைவியும் அக்கா தங்கைகள் என்றால் இல்லை. எதற்காக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் அன்பழகன் என்பவரின் ஜெயக்குமார் கடன் வாங்கினார், நான் பாண்டு எழுதினேன் அதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் அன்பழகன் வரசொல்லிதான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் பாண்டு எழுத ஏதாவது லைசன்ஸ் வைத்துள்ளேனா என்றால் அப்படி எதுவும் இல்லை. நான் எங்கு பாண்டு எழுதினேன் என்றால் ரெட்டிப்பட்டியில் உள்ள அன்பழகன் வீட்டில் வைத்து எழுதினேன். எந்த தேதியில் எழுதினேன் என்றால் 01.011.2020 ம் தேதியில் எழுதினேன். அப்போது யார் யார் இருந்தோம் என்றால் நான், ஜெயக்குமார், விஜயன், பாலமுருகன், அன்பழகன் ஆகியோர் இருந்தோம்.

2. நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் மொரப்பூரில் குடியிருந்து வருகிறேன். அன்பழகன் வீட்டிற்கு போனதாக சொல்லியுள்ளேன் எத்தனை மணிக்கு போனேன் என்றால் காலை 7.30

மணிக்கு போனேன். யார் என்னை கூப்பிட்டது என்றால் ஜெயக்குமார் என்பவர் கூப்பிட்டார். என்ன சொல்லி கூப்பிட்டு போனார் என்றால் குடும்ப பிரச்சனைக்காக அமொண்ட் வேண்டும் என்று என்னை கூப்பிட்டு போனார், அமொண்ட் வாங்கிக்கொண்டு சைன் போட்டார் அது ஸ்டாம்ப் மேலே ஒன்று, கீழே ஒன்று. பாண்டு அன்பழகன் வீட்டில் இருந்துதான் எடுத்துவரப்பட்டதா என்றால் ஆமாம், தற்போது சாட்சி அன்பழகன் வீட்டிற்கு ஜெயக்குமார் பாண்டு, ஸ்டாம்ப் எடுத்துவந்தார் என்று சாட்சியம் அளித்தார். யார் என்னை பாண்டில் எழுத சொன்னது என்றால் ஜெயக்குமார் என்பவர் எழுதச்சொன்னார். யார் முதலில் கையெழுத்து போட்டது என்றால் ஜெயக்குமார்சார்தான் முதலில் கையெழுத்து போட்டார். சாட்சி எங்கிருந்தார்கள் என்றால் அன்பழகன் வீட்டிற்கு வரசொல்லிசாட்சிகளிடம் சொன்னார் அதனால் அவர்கள் ரெட்டிப்பட்டியில் இருந்து வந்தார்கள்.

3. யார் யார் சாட்சி கையெழுத்து போட்டது என்றால் விஜயன் த/பெ. ராமு செட்டியார், பாலமுருகன் த/பெ. ராஜூ ஆகியோர். சாட்சிகள் இருவரும் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் விஜயன் என்பவர் துணி வியாபாரமும், பாலமுருகன் என்பவர் விவசாயமும் செய்கிறார்கள். மேற்படிசாட்சிகள் இருவரும் அன்பழகன் ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் இருவரும் கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் பார்த்தேன். யார் முதலில் கையொப்பம் செய்தது என்றால் விஜயன். பணம் எவ்வாறு கொடுத்தார் என்றால் 500 ரூபாய் தாள்களாக கொடுத்தார். அந்த பணத்தை அன்பழகன்

வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தாரா என்றால் இல்லை, வீட்டில் இருந்து எடுத்துக்கொடுத்தார். ஜெயக்குமாரை எனக்கு எப்படி தெரியும் என்றால் மொரப்பூரில் உள்ள டீ கடைக்கு அவர் வருவார் நானும் அதே டீ கடைக்கு செல்வேன் அந்த வகையில் தெரியும். ஜெயக்குமார் எங்கு குடியிருக்கிறார் என்றால் அப்போது மொரப்பூர் வீஜபி நகரில் குடியிருந்தார், தற்போது எங்கு குடியிருக்கிறார் என்று தெரியவில்லை.

4. என்னை ஜெயக்குமார் எங்கு இருந்து அவர் பணம் வாங்கியதாக சொல்லும் தேதியில் அழைத்து சென்றார் என்றால் மொரப்பூரில் உள்ள டீ கடைக்கு வந்திருந்தார், நானும் அங்கு இருந்தேன் அங்கிருந்தான் அழைத்துச்சென்றார். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். ஜெயக்குமார் அரசு பள்ளியில் ஆசியராக வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். வாதி அன்பழகன் வட்டிக்கு பணம் கொடுக்கும் லேவாதேவி தொழில் செய்து வருகிறார் என்றால் இல்லை. ஜெயக்குமார் ஏதோ பணம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் ரூபாய் 2 இலட்சம். பணம் ஜெயக்குமார் எதற்கு தேவை என்று சொன்னார் என்றால் குடும்ப சூழ்நிலைக்காக வேண்டும் என்று சொன்னார்.

5. ஜெயக்குமாருக்கு என்ன குடும்ப சூழ்நிலை என்று தெரியுமா என்றால் அவருடைய மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று சொன்னார். ஜெயக்குமார் குடியிருந்த வீட்டை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், வாதி அன்பழகன் மெக்கானிக் செட் வைத்துள்ள வீட்டிற்கு பின்னால்தான் ஜெயக்குமார் குடியிருந்தார் என்றால் இல்லை. ஜெயக்குமார்

எழுதிக்கொடுத்தாக சொல்லும் புரோநோட்டில் கையொப்பம் மட்டும்தான் ஜெயக்குமார் செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம். அந்த சமயத்தில் ஜெயக்குமார் புரோநோட் மட்டும்தான் கொடுத்தாரா அல்லது வேறு ஏதாவது ஆவணங்கள் கொடுத்தாரா என்றால் புரோநோட் மட்டும்தான் கையொப்பம் செய்து கொடுத்தார்.

6. ஜெயக்குமார் அவருடைய நண்பரான செல்வம் என்பவருக்கு ரூ.1,25,000/– கடன் பெற்று கொடுத்தார் அதற்காக ஜெயக்குமார் ஜாமின் பொறுப்புக்காக ஒரு கையெழுத்து மட்டும் போட்டு புரோநோட்டை கொடுத்தார் அதனை மோசடியாக பயன்படுத்தி அன்பழகன் ஜெயக்குமார் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆசிரியராக இருப்பதால்அவரிடம் இருந்து பணத்தை எப்படியாவது பறிக்கவேண்டும் என்பதற்காக மோசடியாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல அன்பழகன் வீட்டிற்கு சென்று ஜெயக்குமார் எந்த காலத்திலும் கடன் பெறவில்லை, நான் அன்பழகன் நடத்திவரும் மெக்கானிக் சாப்பில் வேலை செய்து வரும் உறவினர் என்பதால் அன்பழகனுக்கு ஆதரவாக பெபய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் சாட்சிகள் கையொப்பம் செய்ததாக சொல்லுவதையும், ஜெயக்குமார் கடன் பெற்றதாக சொல்லுவது எதையும் நான் நேரிட்டு பார்க்கவில்லை வாதி கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன், தாவா

புரோநோட்டில் உள்ள விவரங்கள் எதவும் தெரியாமல் பொய்யான சங்கதிகளை சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்பழகனின் உறவினர், அன்பழகன் எனக்கு சித்தப்பா உறவு முறை அந்த உறவை கூட மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.06 15:34:47 +0530